## இலங்கை அணுசக்தி ஒழுங்குபடுத்தல் பேரவை - 2018

---

### 1.1 அபிப்பிராயம்

இலங்கை அணுசக்தி ஒழுங்குபடுத்தல் பேரவையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்களை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இலங்கை அணுசக்தி ஒழுங்குபடுத்தல் பேரவையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, பேரவை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது பேரவையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பேரவையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் பேரவையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு பேரவை அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

---

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பேரவையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.
- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு பேரவைக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை

காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் பேரவையின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பேரவையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- பேரவையின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் இணங்கியிருந்தது என்பதும்,

- பேரவை அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தன என்பதும்,

- பேரவையின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தன என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களிற்கான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| 1994 யூன் 14 ஆம் திகதிய 95 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 2 | பொது நிர்வாக அமைச்சினால் அல்லது திறைசேரியினால் குறிப்பாக அனுமதிக்கப்பட்ட | பணிப்பாளர் சபைத் தீர்மானத்தின் பிரகாரம் இது அமுல்ப்படுத்தப்பட்டிருந்ததுடன் நாளதுவரை அவ்வாறான படிகளை நிறுத்துவதற்கான | சுற்றறிக்கையுடன் இணங்குதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| ஆம் பந்தி | நலன்கள் ஆளுகை சபையின் அங்கீகாரத்துடன் செலுத்தப்பட வேண்டும். எனினும் அத் தேவைப்பாட்டிற்கு முரணாக பணிப்பாளர் சபை அங்கீகாரத்தின் மீது மாத்திரம் கதிர்வீச்சு பாதுகாப்பு மேற்பார்வையில் ஈடுபட்டிருந்த உத்தியோகத்தர்களிற்கு 2016 ஆம் ஆண்டின் போது ரூபா 70,780 தொகையும் 2017 ஆம் ஆண்டின் போது ரூபா 157,420 தொகையுமாக ரூபா 228,200 கூட்டுமொத்தத் தொகை செலுத்தப்பட்டிருந்தது. முன்னைய ஆண்டுக் கணக்காய்வு அறிக்கையில் இது அறிக்கையிடப்பட்டிருந்த போதிலும் அது தொடர்பாக கவனம் செலுத்தப்படாமல் அவ்வாறே மீளாய்வாண்டின் போதும் ரூபா 201,425 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை. ஆகையால் அத்தகைய படிகளை செலுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

செயற்பாட்டு விளைவு ரூபா 1,258,188 பற்றாக்குறையானதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 3,102,117 ஆக காணப்பட்டது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 1,843,929 தொகையான முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. மொத்தச் செலவினம் ரூபா 10,529,124 ஆல் அதிகரித்திருந்த போதிலும் வருமானம் ரூபா 12,373,054 ஆல் அதிகரித்தமை இந்த முன்னேற்றத்திற்குப் பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 03 ஆண்டுகளிற்கான இலங்கை அணுசக்தி ஒழுங்குபடுத்தல் பேரவையின் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்த போது 2015 ஆம் ஆண்டிற்கான நிதிப் பற்றாக்குறை ரூபா 3,479,000 ஆக இருந்ததுடன் 2016 ஆம் ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 973,993 ஆகவும் 2017 ஆம் ஆண்டில் இது ரூபா 3,102,117 ஆகவும் இருந்தன. மீளாய்வாண்டின் போது இது ரூபா 1,258,188 வரை குறைவடைந்திருந்தது. எனினும் வரிக்கு முன்னரான நிதி விளைவுகளிற்கு மேற்கொள்ளப்பட்ட ஊழியர் சம்பளச் சீராக்கங்களை கருத்தில் கொள்ளும் போது ஒழுங்குபடுத்தல் பேரவையின் பங்களிப்பு 2015 ஆம் ஆண்டிலிருந்து 2018 ஆம் ஆண்டு வரை ரூபா 11,512,124, ரூபா 18,904,956, ரூபா 23,135,332 மற்றும் ரூபா 31,557,636 ஆகக் காணப்பட்டன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவச் செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| முதலாவது அனுமதிப்பத்திரம் உரிய திகதிக்கு முன்னரே ஒன்று தொடக்கம் ஆறு ஆண்டுகள் வரையில் சலுகை அடிப்படையில் மோட்டார் வாகன அனுமதிப்பத்திரத்திற்கு உரித்துள்ள பேரவையின் 5 உத்தியோகத்தர்களால் பெறப்பட்டிருந்தன. எனினும் நிதிப்பிரமாணம் 128(1)(கி) இன் பிரகாரம் இது தொடர்பில் சீராக்கம் செய்வதற்கு கணக்கீட்டு உத்தியோகத்தரால் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.<br><br>எஸ்சீ.எவ்ஆர்.662/2010 ஆம் இலக்க வழக்கு உடன்படிக்கையின் பிரகாரம் இது சரியாக இருந்ததென முகாமைத்துவம் வெளிப்படுத்தியிருந்த போதிலும் அவ் உடன்படிக்கையை கைச்சாத்திட்ட போது வழக்கு சார்பான உடன்படிக்கை மற்றும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. அதற்கிணங்க அரசாங்கத்தின் உரிமைகளிற்கு சாதகமாக பணிப்பாளர் சபையால் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்ததென கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் 2016 ஆம் ஆண்டில் உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்ட வழக்கு சலுகை அடிப்படையில் மோட்டார் வாகன அனுமதிப்பத்திரத்தை வழங்குதல் தொடர்பில் தொடரப்பட்ட வழக்கொன்றாக காணப்படாததுடன் சலுகை அடிப்படையில் மோட்டார் வாகன அனுமதிப்பத்திரத்தை வழங்குதல் வழக்கு உடன்படிக்கைக்கு முன்னர் இடம்பெற்றிருந்தது. | அணுசக்திச் சபை அதே நடவடிக்கையை எடுத்திருந்ததுடன் அமைச்சு அவ் உத்தியோகத்தர்களிற்கான அனுமதிப்பத்திரங்களை அங்கீகரித்திருந்ததால் சபையால் அதற்கிணங்க அதே நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. மேலும், 2010 ஆம் ஆண்டில் அணுசக்தி அதிகாரசபைக்கு எதிராக அணுசக்தி அதிகாரசபையின் ஊழியரொருவரால் அவரை 2006 ஜேஎம்ஜ 1 சம்பள குறியீட்டில் வைத்திருப்பதற்காக தொடரப்பட்டிருந்த எஸ்சீ.எவ்ஆர்.662/2010 ஆம் இலக்க வழக்கிற்காக அணுசக்தி அதிகாரசபை மற்றும் நிதி அமைச்சு உள்ளடங்கிய சில நிறுவனங்களின் சார்பில் தோன்றியிருந்த சட்டமா அதிபரால் உச்ச நீதிமன்றத்தில் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையுடன் எமது நிறுவனம் திருப்திப்படுகின்றதுடன் அவ் உடன்படிக்கைக்கு இணங்க அனுமதிப்பத்திரங்களை வழங்குவதில் தவறு காணப்படவில்லை. ஆகையால் இது தொடர்பில் வேறு ஏதாவது நடவடிக்கையை எடுப்பதற்கான சாத்தியத்தன்மை காணப்படவில்லை. | நிதிப்பிரமாணம் 128(1)(கி) இன் பிரகாரம் குறித்த செயற்பாட்டைத் திருத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியதுடன் உரிய அங்கீகாரங்கள் மற்றும் அரசாங்க உரிமைகளிற்காக முழுமையான கவனம் செலுத்தப்பட வேண்டும். |

### 3.2 செயற்பாட்டுச் செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) 2014 இன் 40 ஆம் இலக்க இலங்கை அணுசக்தி அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் செயற்பாடுகளை பூர்த்தி செய்தல் போதாமை.<br>(i) அதிகாரச்சட்டத்தின் 10(அ) பிரிவின் பிரகாரம் நாட்டின் தனியார் வைத்தியசாலைகளுடன் தொடர்புபட்ட அயனாக்கல் கதிர்வீச்சு தொடர்பான நடைமுறைகளை கண்காணித்து கட்டுப்படுத்துவதற்காக அவ் வைத்தியசாலைகளால் அனுமதிப்பத்திரங்கள் பெறப்பட வேண்டிய போதிலும் 3 மாவட்டங்களிலுள்ள 20 தனியார் வைத்தியசாலைகளில் மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரீட்சிப்பின் போது அவ்வாறு அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக்கொள்ளாமல் ஆறு இடங்கள் மூலம் ஊடுகதிர் (x-ray) சேவைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | அனுமதிப்பத்திரங்களை பெற்றுக்கொள்ளாமல் ஊடுகதிர் இயந்திரங்களை பயன்படுத்தும் நிறுவனங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரீட்சிப்பின் போது இருபத்து ஆறு நிறுவனங்கள் இனங்காணப்பட்டிருந்ததுடன் அந்நிறுவனங்களை கண்காணிப்பதற்காக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன. அவை கிடைத்தால் நிறுவனங்களை இனங்காண்பதற்கு மேலும் நடவடிக்கைகள் எடுக்கப்படும். | அதிகாரச்சட்டத்தின் 10(அ) பிரிவின் பிரகாரம் பொருத்தமானவாறு மேற்கொள்ளப்பட்ட ஏற்பாடுகள் நடைமுறையில் அமுல்ப்படுத்தப்பட வேண்டும். |
| (ii) அதிகாரச்சட்டத்தின் 10(ஈ) பிரிவின் பிரகாரம் அணுசக்தி வேலைத்தளம் தொடர்பாக இணங்கப்பட வேண்டிய சர்வதேச நியமங்கள் மற்றும் கடப்பாடுகளுடன் இலங்கை இணங்குகின்றதா என்பதை உறுதிப்படுத்துவதற்கு அமுலப்படுத்தப்பட்ட பரீட்சிப்பு நிகழ்ச்சித்திட்டங்களின் போது பேரவையால் பயன்படுத்தப்பட்ட உபகரணங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்ட சர்வதேச நியமங்களிற்கு இணங்க சரியான தன்மையை உறுதிப்படுத்துவதற்காக அளவுத்திருத்தம் செய்யப்படுதல் வேண்டும். | அதிகமான உபகரணங்கள் புதிய உபகரணங்களாக காணப்படுவதன் காரணமாக அளவுத்திருத்தம் செய்தல் அவசியமற்றிருந்தது. ஏற்கனவேயுள்ள ஏற்பாடுகளில் சார்ந்திருந்து அளவுத்திருத்தம் செய்யப்பட வேண்டிய உபகரணங்களை அளவுத்திருத்தம் செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன. | சபையால் பயன்படுத்தப்பட்ட உபகரணங்களின் பரீட்சிப்பு நிகழ்ச்சித்திட்டங்களின் போது ஏற்றுக்கொள்ளப்பட்ட சர்வதேச நியமங்களிற்கு இணங்க சரியான தன்மையை உறுதிப்படுத்துவதற்காக அளவுத்திருத்தம் செய்யப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | எனினும் கதிர்வீச்சு அளவு வீதத்தை (radiation dose rate) அளவிடுவதற்காக பயன்படுத்தப்பட்ட 39 உபகரணங்களில் 25 மற்றும் கதிர்வீச்சு அளவை (radiation dose) அளவிடுவதற்காக பயன்படுத்தப்பட்ட 25 உபகரணங்களில் 23 அளவுத்திருத்தம் செய்யப்பட்டிருக்கவில்லை. | | |
| (iii) | அதிகாரச்சட்டத்தின் 11(ஈ) பிரிவின் பிரகாரம் அனுமதிப்பத்திரங்களை வழங்குவதில் பூர்த்தி செய்யப்பட வேண்டிய நிபந்தனைகளுடன் அந் நிறுவனங்கள் இணங்கியுள்ளனவா என்பதை உறுதிப்படுத்துவதற்கு முன் அறிவித்தல் வழங்கப்படாமல் 26 நிறுவனங்களில் தெரிவுச் செவ்வை நிகழ்ச்சித்திட்டங்களை மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் அவற்றில் 3 நிறுவனங்கள் மாத்திரம் பரீட்சிக்கப்பட்டிருந்தன. அதற்கிணங்க அனுமதிப்பத்திரங்களை பெற்றுக்கொண்ட நிறுவனங்கள் அவ் அனுமதிப்பத்திரங்களில் உள்ளடக்கப்பட்ட விதிகளுடன் இணங்கியிருந்தனவா என்பதை உறுதிப்படுத்துவதற்கு போதியளவு பரீட்சிப்பு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | உத்தியோகத்தர்கள் போதாமை மற்றும் புதிய நிறுவனங்களிற்கு அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்காக முன்னுரிமை வழங்கப்படுதல் காரணமாக மேலதிக பரீட்சிப்புக்களை மேற்கொள்ள முடியாதிருந்தது. எனினும் எதிர்வரும் ஆண்டில் பரீட்சிப்புக்கள் மேற்கொள்ளப்படும். | அதிகாரச்சட்டத்தில் வழங்கப்பட்ட பிரமாணங்கள் அல்லது விதிகள் மற்றும் அனுமதிப்பத்திரங்களில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகள் வலுப்பெற்றிருப்பதை உறுதிப்படுத்துவதற்கு பொருத்தமான படிமுறைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (iv) | 1999 இன் 01 ஆம் இலக்க கதிர்வீச்சுப் பாதுகாப்புப் பிரமாணங்களிற்கு இணங்க பேரவையால் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரங்களையுடைய 28 நிறுவனங்கள் Thermo Luminescence Dosimeter (TLD) கார்ட்களை (cards) பயன்படுத்தியிருக்காதமை அவதானிக்கப்பட்டது. | அனைத்து நிறுவனங்களும் Thermo Luminescence Dosimeter (TLD) கார்ட்களை பெற்றுக்கொள்வதற்கு ஒழுங்குபடுத்தல் பேரவையின் அறிவித்தலை பெற்றிருந்தன. எனினும் அனைத்து நிறுவனங்களிற்கும் எச்சரிக்கை கடிதமொன்றை அனுப்புவதற்கு மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்படும். | 1999 இன் 01 ஆம் இலக்க கதிர்வீச்சுப் பாதுகாப்புப் பிரமாணங்களுடன் இணங்குதல் வேண்டும். |
| (ஆ) | தேசிய அணுசக்தி கதிர்வீச்சியல் அவசரகால நிலைமைகளை எதிர்கொள்ளும் திட்டம் (National Nuclear Radiological Emergency Response Plan) | | |

| | | |
|---|---|---|
| 2014 இன் 40 ஆம் இலக்க இலங்கை அணுசக்தி அதிகாரச்சட்டத்தின் 58 ஆம் பிரிவின் பிரகாரம் தேசிய இடர் செயற்பாட்டுத் திட்டத்தில் அணுசக்தி அல்லது கதிர்வீச்சியல் அவசரகால நிலைமையொன்றிற்கு முககங்கொடுக்கும் போது இனங்காணப்பட்ட தேசிய தொழில்நுட்ப நிறுவனங்களாக ‘‘தேசிய அணுசக்தி கதிர்வீச்சியல் அவசரகால நிலைமைகளை எதிர்கொள்ளும் திட்டம்’’ இலங்கை அணுசக்தி ஒழுங்குபடுத்தல் பேரவையால் தயாரிக்கப்பட வேண்டும். 2016 ஆம் ஆண்டிலிருந்து இது செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும் அவசரகால நிலைமையை எதிர்கொள்ளும் திட்டத்தை தயாரிப்பது தொடர்பான நடவடிக்கைகள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | தேசிய அணுசக்தி கதிர்வீச்சியல் அவசரகால நிலைமைகளை எதிர்கொள்ளும் திட்டம் உரிய காலப்பகுதியினுள் சரியாக பூர்த்திசெய்யப்பட வேண்டியது முக்கியமானதாகும். ஆகையால் எதிர்பார்க்கப்பட்ட காலப்பகுதியை விடக் கூடுதலான காலப்பகுதியொன்று உரிய நடவடிக்கைகளிற்காக நடைமுறையில் செலவிடப்பட வேண்டும். எனினும் 2018 திசெம்பர் இறுதியில் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்படுவதற்கு உரிய திட்டம் பட்டியல்படுத்தப்பட்டிருந்தது. | தேசிய அணுசக்தி கதிர்வீச்சியல் அவசரகால நிலைமைகளை எதிர்கொள்ளும் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். |
| (இ) மூலங்கள் உள்ளடங்கிய தேசிய பதிவேடொன்றைப் பேணுதல் | | |
| இலங்கையில் பயன்படுத்தப்படுகின்ற கதிரியக்கப் பொருட்கள் மற்றும் கதிர்வீச்சு துணைப்பொருட்கள் தொடர்பான தரவுகள் உள்ளடங்கிய பதிவேடொன்றை பேணுவதற்காக ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை தகவல் முறைமை (ஆர்ஏஐஎஸ்) எனும் பெயரையுடைய மென்பொருள் உள்ளடங்கலாக ரூபா 2,138,525 பெறுமதியான உபகரண முறைமையொன்று 2017 ஆம் ஆண்டில் சர்வதேச அணுசக்தி நிறுவனத்தால் நன்கொடையாக வழங்கப்பட்டிருந்தது. அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டிருந்த 205 நிறுவனங்களிற்கான தரவுகளின் சேகரிப்பு இவ் மென்பொருளால் பேணப்பட வேண்டிய போதிலும் 2018 ஆம் ஆணடின் இறுதி வரை 30 நிறுவனங்கள் தொடர்பான தரவுகள் மாத்திரமே இவ் மென்பொருளின் தரவு சேகரிப்பில் உள்ளடக்கப்பட்டிருந்தது. | மென்பொருளிற்கான அதிகளவான தரவுகளை பதிவு செய்வதற்காக அதிக நேரம் செலவிடப்பட வேண்டியிருந்ததுடன் விஞ்ஞானவியல் (Scientific) உத்தியோகத்தர்கள் காணப்படாதமை காரணமாக 30 நிறுவனங்கள் தொடர்பான தரவுகள் மாத்திரம் பதிவு செய்யப்பட்டிருந்தது. | ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை தகவல் முறைமையானது (ஆர்ஏஐஎஸ்) அனைத்து தரவுகளையும் உள்ளடக்குவதன் மூலம் நாளதுவரையாக்கப்பட்டு பேணப்பட வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2018 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் பேரவையின் செயலாற்றல் பின்வருமாறுள்ளது. | | |
| • விதிகள் மற்றும் பிரமாணங்களைத் தயாரித்தல்<br><br>இறக்குமதி செய்யப்பட்ட உணவின் கதிர்வீச்சு மட்டம் தொடர்பான விதிகள், அயனாக்கல் கதிர்வீச்சு பாதுகாப்பு மீதான பிரமாணங்கள் மற்றும் கதிரியக்க மூலங்களின் பாதுகாப்பு மீதான பிரமாணங்கள் என்பவற்றை தயாரிப்பது தொடர்பான செயற்பாடுகள் மீளாய்வாண்டின் போது பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிலும் ஆரம்ப வரைபுகள் மாத்திரமே தயாரிக்கப்பட்டிருந்தன.<br><br>• 2018 ஆம் ஆண்டின் போது அமைச்சிற்கான கதிரியக்கக் கழிவு முகாமைத்துவம் தொடர்பாக தேசிய கொள்கையொன்றை தயாரிப்பதற்காக இறுதி வரைபை சமர்ப்பிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் இது மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் ஆரம்பக் கட்ட வரைபை தயாரிப்பதிலேயே காணப்பட்டது. | அவதானிப்புக்களில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் எதிர்வரும் ஆண்டினுள் பூர்த்தி செய்யப்பட வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது. | ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட நடவடிக்கைகளை ஆண்டினுள் போதியளவு பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

### 4.2 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) அணுசக்தி ஒழுங்குபடுத்தல் பேரவைக்கான நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகளை அடைந்து கொள்வதற்குத் தேவையான 07 கணனிகள், உத்தியோகத்தர்கள் மற்றும் களஞ்சிய வசதிகளிற்கான 6000 சதுர அடி பரப்பளவான இடவசதி போன்ற நிலுவையாகவுள்ள பௌதீக | 7 கணனிகள் பெறப்பட்டிருந்த போதிலும் நிதியேற்பாடுகள் காணப்படாததன் காரணமாக ஏனைய குறைபாடுகள் பூர்த்தி செய்யப்பட முடியாதிருந்தன. | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்துகொள்வதற்காக தேவையான பௌதீக மற்றும் மனித வளங்களைப் பெற்று வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மற்றும் மனித வளங்களை 2019 பெப்ரவரி 15 வரையிலும் சபையால் பூர்த்தி செய்ய முடிந்திருக்கவில்லை. | | |
| (ஆ) | 2018 ஆம் ஆண்டிற்காக அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்காகவும் களப் பரீட்சிப்பு நிகழ்ச்சித்திட்டங்களிற்காகவும் ரூபா 48 மில்லியன் நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் நிலைபேறான அபிவிருத்தியின் கீழ் திட்டமிடப்பட்ட முன்னேற்றப்பட்ட செயற்பாடுகளை பெற்றுக்கொள்வதற்குத் தேவையான பௌதீக வளங்களை (வாகனங்களை கொள்வனவு செய்தல் மற்றும் வாகனங்களை வாடகைக்கு பெறுதல்) பெற்றுக்கொள்வதற்காக நிதியேற்பாடுகள் காணப்படாததன் காரணமாக தூரப் பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட வேண்டிய கதிர்வீச்சு மேற்பார்வையில் தாமதங்கள் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. | நிதியேற்பாடுகள் காணப்படாததன் காரணமாக அக் குறைபாடுகளை பூர்த்தி செய்ய முடியாதிருந்தது. | தேவையான பௌதீக வளங்களை பெற்று வழங்குவதற்கும் நிலைபேறான அபிவிருத்தியின் கீழ் திட்டமிடப்பட்ட செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |